**11-01-2021 காலைமுரளி ஓம்சாந்தி பாப்தாதா மதுபன்**

**சாராம்சம்:** இனிய குழந்தைகளே, அதி அன்பிற்கினிய சிவபாபா, குழந்தைகளாகிய உங்களை உலக அதிபதிகள் ஆக்குவதற்கு வந்துள்ளார். எனவே, அவருடைய ஸ்ரீமத்தைப் பின்பற்றுங்கள்.

**கேள்வி:** பரம தந்தையுடன் தொடர்பான எந்த இரண்டு முற்றிலும் மாறுபட்ட விடயங்களை மக்கள் ஒருவருக்கொருவர் கூறிக் கொள்கிறார்கள்?

**பதில்:** ஒருபுறம், அவர் அநாதியான ஒளி என்று அவர்கள் கூறுகிறார்கள். மறுபுறம் அவர் பெயருக்கும், ரூபத்திற்கும் அப்பாற்பட்டவர் என அவர்கள் கூறுகிறார்கள். இந்த இரண்டு விடயங்களும் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டவை. அவரை மிகச்சரியாக அறிந்து கொள்ளாததனால், அவர்கள் தொடர்ந்தும் தூய்மையற்றவர்கள் ஆகுகிறார்கள். தந்தை வரும்பொழுது, தனது உண்மையான அறிமுகத்தை வழங்குகிறார்.

**பாடல்:** உங்களுடைய வீதியில் வாழ்ந்து உங்களுடைய வீதியில் மரணிப்பேன்.

ஓம் சாந்தி. குழந்தைகளாகிய நீங்கள் பாடலைக் கேட்டீர்கள். ஒருவர் மரணிக்கும்பொழுது, அவர் ஒரு தந்தைக்குப்; பிறக்கிறார். அவர் தனது தந்தைக்குப் பிறந்துள்ளார் எனக் கூறப்படுகிறது. அவர்கள் தாயின் பெயரைக் குறிப்பிடுவதில்லை; தந்தைக்கே பாராட்டுக்கள் வழங்கப்படுகின்றன. நீங்கள் ஆத்மாக்கள் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது புரிந்துகொள்கிறீர்;கள். அது சரீரங்களுக்குரிய விடயமாகும். ஓர் ஆத்மா தனது சரீரத்தை விடுத்து, தனது அடுத்த தந்தையிடம் செல்கிறார். 84 பிறவிகளில் உங்களுக்கு 84 பௌதீகத் தந்தையர்கள் இருந்துள்ளார்கள். உண்மையில், நீங்கள் ஆதியில் அசரீரியான தந்தையின் குழந்தைகள். ஆத்மாக்களாகிய நீங்கள் பரமாத்மா பரமதந்தையின் குழந்தைகள். உண்மையில், நீங்கள் நிர்வாண தாமம், அமைதி தாமம் என்றழைக்கப்படுகின்ற இடத்து வாசிகள். நீங்கள் ஆதியில் அந்த இடத்துவாசிகள். தந்தையும் அங்கேயே வசிக்கிறார். நீங்கள் இங்கு வந்து பௌதீகத் தந்தையர்களின் குழந்தைகள் ஆகுவதனால் அந்தத் தந்தையை மறந்து விடுகிறீர்;கள். நீங்கள் சந்தோஷமாக இருக்கும் சத்தியயுகத்தில், பரலோகத் தந்தையை மறந்து விடுகிறீர்;கள். அவர்களில் எவரும் சந்தோஷமாக இருக்கும்பொழுது, அந்தத் தந்தையை நினைவுசெய்வதில்லை. அவர்கள் சந்தோஷமற்றுள்ளபொழுதே, அவரை நினைவுசெய்கிறார்கள், ஆத்மாக்களே அவரை நினைவு செய்கிறார்கள். பௌதீகத் தந்தையை நினைவுசெய்யும்பொழுது, புத்தி சரீரத்தை நோக்கிச் செல்கிறது. இந்த பாபா (பிரம்ம பாபா) அந்த பாபாவை நினைவுசெய்யும்பொழுது, 'ஓ பாபா!' எனக் கூறுகிறார். இருவரும் பாபா ஆவார்கள். 'பாபா' என்பதே சரியான வார்த்தை. அந்த ஒரேயொருவரும் தந்தை, இவரும் தந்தையே ஆவர். ஓர் ஆத்மா அந்த ஆன்மீகத் தந்தையை நினைவுசெய்யும்பொழுது, அவரது புத்தி அங்கு செல்கிறது. தந்தை இங்கமர்ந்திருந்து குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்துகிறார். பாபா வந்து உங்களைத் தனக்குரியவர் ஆக்கியுள்ளார் என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். தந்தை கூறுகிறார்: நான் முதலில் உங்களைச் சுவர்க்கத்திற்கு அனுப்பியபொழுது, நீங்கள் மிகவும் செல்வந்தர்களாக இருந்தீர்கள், ஆனால் இப்பொழுது நாடகத் திட்டத்திற்கேற்ப, 84 பிறவிகளை எடுத்த பின்னர் நீங்கள் சந்தோஷமற்றவர்கள்

ஆகியுள்ளீர்கள். இப்பொழுது, நாடகத்திற்கேற்ப, பழைய உலகம் முடிவடைய வேண்டும். ஆத்மாக்களாகிய நீங்களும், உங்கள் சரீர ஆடைகளும் சதோபிரதானாக இருந்தன. பின்னர், ஆத்மாக்களாகிய நீங்கள் சத்திய யுகத்திலிருந்து திரேதா யுகத்திற்குச் சென்றதால், உங்கள் சரீரங்களும் திரேதா யுகத்திற்குரியவை ஆகின. அதன்பின்னர், நீங்கள் துவாபர யுகத்திற்குச் சென்றீர்கள். இப்பொழுது, ஆத்மாக்களாகிய நீங்கள் முற்றிலும் தூய்மையற்றவர்கள் ஆகியுள்ளதனால், உங்கள் சரீரங்களும் தூய்மையற்றவை ஆகிவிட்டன. நிறம் மங்குவதால், எவரும் 14 கரட் தங்கத்தை விரும்பாததைப் போன்று, நீங்களும் இப்பொழுது நிறம் மங்கியவர்களாகவும், கலியுகத்தவர்களாகவும் ஆகிவிட்டீர்கள். இப்பொழுது, மிகவும் அவலட்சணம் ஆகிவிட்ட ஆத்மாக்களும், சரீரங்களும் எவ்வாறு மீண்டும் தூய்மையாக முடியும்? ஆத்மாக்கள் தூய்மையாகும்பொழுது, தூய சரீரங்களைப் பெறுகிறார்கள். நீங்கள் எவ்வாறு அத்தகையவர்கள் ஆகுவீர்கள்? கங்கையில் குளிப்பதனாலா? இல்லை! ‘ஓ தூய்மையாக்குபவரே!’ என நீங்கள் கூவி அழைக்கிறீர்கள். ஆத்மாவே இவ்வாறு கூறுகிறார். புத்தி பரலோகத் தந்தையை நோக்கிச் செல்கிறது. ‘ஓ பாபா!’ “பாபா” எனும் வார்த்தை எவ்வளவு இனிமையானது எனப் பாருங்கள். பாரதத்தில் மாத்திரமே நீங்கள் “பாபா, பாபா” எனக் கூறுகின்றீர்கள். நீங்கள் இப்பொழுது, பாபாவிற்குரியவர்கள், அத்துடன் நீங்கள் ஆத்ம உணர்வுடையவர்கள் ஆகுகிறீர்கள். தந்தை கூறுகிறார்: நான் உங்களைச் சுவர்க்கத்திற்கு அனுப்பினேன். நீங்கள் புதிய சரீரங்களை எடுத்தீர்கள். இப்பொழுது, நீங்கள் என்னவாகி விட்டீர்கள்? நீங்கள் எப்பொழுதும்; இந்த விடயங்களை உங்களுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் தந்தையை மட்டுமே நினைவுசெய்ய வேண்டும். நீங்கள் அவரை நினைவுசெய்கிறீ;ர்கள்: ஓ பாபா, ஆத்மாக்களாகிய நாங்கள் தூய்மையற்றவர்கள் ஆகிவிட்டோம்! இப்பொழுது, வந்து எங்களைத் தூய்மையாக்குங்கள்! இந்தப் பாகம் நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது, இதனாலேயே அவர்கள் கூவியழைக்கிறார்கள். நாடகத் திட்டப்படி, பழைய உலகம் மீண்டும் புதிதாக்கப்படும்பொழுதே அவர் இங்கு வருவார். எனவே, அவர் நிச்சயமாகச் சங்கம யுகத்திலேயே வரவேண்டும். பாபாவே அதியன்பிற்கினியவர் என்ற நம்பிக்கை குழந்தைகளான உங்களிடம் உள்ளது. “இனிமையானது, இனிமையிலும் இனிமையானது, இனிமையிலும் அதி இனிமையானது” எனக் கூறப்படுகிறது. இப்பொழுது, யார் இனிமையானவர்? லௌகீக உறவுமுறைகளில், உங்களுக்குப் பிறப்பினை வழங்கும் தந்தையே முதலாவதாக இருக்கிறார். பின்னர், ஆசிரியர் இருக்கிறார்; அவர் நல்லவர். நீங்கள் அவரிடம் கற்று ஓர் அந்தஸ்தை அடைகிறீர்கள். ஞானமே வருமானத்திற்கான மூலாதாரம் என்று கூறப்படுகிறது. கியான் என்பது ஞானமும், யோகம் என்பது நினைவும் ஆகும். எனவே, உங்களைச் சுவர்க்க அதிபதிகள் ஆக்கிய எல்லையற்ற தந்தையை நீங்கள் மறந்துவிட்டீர்கள். எவ்வாறு சிவபாபா வருகிறார் என்பது எவருக்கும் தெரியாது. சிவபாபா பிரம்மாவினூடாக ஸ்தாபனையை மேற்கொள்கிறார் என்பது படங்களி;ல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. கிருஷ்ணரால் எவ்வாறு இராஜயோகத்தைக் கற்பிக்க முடியும்? இராஜயோகம் சத்திய யுகத்திற்காகக் கற்பிக்கப்படுகிறது. எனவே, தந்தை நிச்சயமாக அதனைச் சங்கம யுகத்திலேயே கற்பித்திருக்க வேண்டும். பாபாவே சத்திய யுகத்தை ஸ்தாபிப்பவர். சிவபாபா இவரினூடாக அதனைச் செய்கிறார். அவர் கரன்கரவன்ஹார் (செய்பவரும் மற்றவர்களினூடாகச் செய்விப்பவரும்) ஆவார். அம்மக்கள் திரிமூர்த்தி பிரம்மாவைப் பற்றிப் பேசுகிறார்கள். சிவனே அதியுயர்ந்தவர். இவர் சரீரதாரி. ஆனால் அவரோ அசரீரியானவர். உலகம் இங்கேயே உள்ளது. இந்த உலகச் சக்கரம் தொடர்ந்தும் சுழல்கிறது; அது தொடர்ந்தும்

மீண்டும் மீண்டும் நிகழ்கின்றது. சூட்சும வதனத்தில் உலகச் சக்கரத்தைப் பற்றிய குறிப்பே கிடையாது. மனிதர்களின் உலக வரலாறும், புவியியலுமே மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன. உலக வரலாறும், புவியியலுமே மீண்டும் மீண்டும் நிகழ்வதைப் பற்றி அவர்கள் கூறுகிறார்கள். அது இந்த நேரத்தையே குறிக்கிறது. சத்திய யுகமும், திரேதா யுகமும், துவாபர யுகமும், கலியுகமும் உள்ளன, இடையில் நிச்சயமாகச் சங்கம யுகமும் தேவைப்படுகிறது. இல்லாவிடின், யார் கலியுகத்தைச் சத்தியயுகமாக மாற்றுவார்கள்? நரகவாசிகளைச் சுவர்க்கவாசிகள் ஆக்குவதற்குத் தந்தை சங்கம யுகத்தில் வருகிறார். இதுவே இறைதந்தையின் அரசாங்கமாகிய, அதியுயர்ந்த அதிகாரம் ஆகும், தர்மராஜும் அவருடன் இருக்கிறார். 'எனக்கு நற்குணங்கள் இல்லை. என்னிடம் எந்த நற்குணங்களும் இருப்பதில்லை!' என ஆத்மாக்கள் கூறுகின்றனர். ஆலயங்களில் உள்ள தேவ விக்கிரகங்களின் முன்னால் மக்கள் செல்லும்பொழுது, அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். அவர்கள் இதனைத் தந்தையிடமே கூறவேண்டும். அவர்கள் அவரை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, இதனைச் சகோதரர்களிடம் கூறுகிறார்கள். அந்தத் தேவர்கள் சகோதரர்கள். நீங்கள் சகோதரர்களிடம் (தேவர்கள்) இருந்து எதனையும் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள். சகோதரர்களை வழிபடும்பொழுது, நீங்கள் தொடர்ந்தும் கீழேயே வந்தீர்கள். பாபா வந்துள்ளார் என்றும், அவரிடமிருந்து நீங்கள் ஓர் ஆஸ்தியைப் பெறுகிறீர்கள் என்றும் குழந்தைகளான நீங்கள் இப்பொழுது புரிந்துகொள்கிறீர்கள். மக்களுக்குத் தந்தையைத் தெரியாது, அவர் சர்வவியாபி என அவர்கள் கூறுகிறார்கள். அவர் அநாதியான ஒளித் தத்துவம் எனச் சிலர் கூறுகின்றனர். அவர் பெயருக்கும் ரூபத்திற்கும் அப்பாற்பட்டவர் என ஏனையோர் கூறுகின்றனர். அவர் அநாதியான ஒளி ரூபமாக இருப்பதால், எவ்வாறு அவர் பெயருக்கும், உருவத்திற்கும் அப்பாற்பட்டவராக இருக்க முடியும்? தந்தையை அறியாததனால், மக்கள் தூய்மையற்றவர்கள் ஆகிவிட்டார்கள். அனைவரும் தமோபிரதான் ஆகவேண்டியுள்ளது. பின்னர், தந்தை வரும்பொழுது, அவர் அனைவரையும் சதோபிரதான் ஆக்குகிறார். ஆத்மாக்கள் அனைவரும் அசரீரி உலகில் தந்தையுடன் வசிக்கிறார்கள். அதன்பின்னர், அவர்கள் இங்கே வந்து, தமது சதோ, ரஜோ, தமோ ஸ்திதிகளினூடாகச் செல்வதால், தமது பாகங்களை நடிக்கிறார்கள். ஆத்மாக்கள் தந்தையை நினைவுசெய்கிறார்கள். தந்தை வந்து, கூறுகிறார்: நான் பிரம்மாவின் சரீரத்தின் ஆதாரத்தை எடுக்கிறேன். இதுவே பாக்கிய இரதம். ஆத்மா இன்றி இரதம் இருக்க முடியாது. இதுவே ஞான மழை எனக் குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டுள்ளது; இது ஞானம் ஆகும். இதனூடாக என்ன நிகழ்கிறது? தூய்மையற்ற உலகம் தூய்மையானதாகுகிறது. கங்கை நதியும், ஜமுனை நதியும் சத்திய யுகத்திலும் இருக்கும். கிருஷ்ணர் கங்கை நதிக்கரைகளில் விளையாடுவதாக அவர்கள் கூறுகின்றனர். அவ்வாறு எதுவும் இல்லை. அவர் சத்தியயுக இளவரசர், அவர் ஒரு மலர் என்பதனால் மிக நன்றாகப் பராமரிக்கப்பட்டார். ஒரு மலர் மிகவும் சிறந்ததும், அழகானதும் ஆகும். அனைவரும் வந்து மலர்களிடமிருந்து நறுமணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். எவரும் முட்களிடமிருந்து நறுமணத்தைப் பெறுவதில்லை. இது இப்பொழுது முட்களின் உலகமாகும். தந்தை வந்து இந்த முட்காட்டைப் பூந்தோட்டமாக மாற்றுகிறார், இதனாலேயே, அவர் பாபுல்நாத் (முட்களின் பிரபு) என அழைக்கப்படுகிறார். அவர் இங்கிருந்து முட்களை மலர்களாக மாற்றுவதனால், அவர் முட்களை மலர்களாக மாற்றும் பாபா எனப் புகழப்படுகிறார். குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது தந்தையிடம் அதிகளவு அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்! பௌதீகத் தந்தையர்கள் உங்களைச் சாக்கடைக்குள் வீசுகிறார்கள்! இந்தத் தந்தை உங்களைத் தூய்மையாக்கி, உங்களை 21 பிறவிகளுக்குச் சாக்கடையிலிருந்து

நூக்குகிறார். அவர்கள் உங்களைத் தூய்மையற்றவர்கள் ஆக்குகிறார்கள், இதனாலேயே, ஆத்மாக்களுக்கு லௌகீகத் தந்தை இருந்தாலும், இந்த உலகிற்கு அப்பாற்பட்ட தந்தையை நினைவுசெய்கிறார்கள். நீங்கள் தந்தையை அரைக்கல்பமாக நினைவுசெய்கிறீர்கள் என்பதை இப்பொழுது புரிந்துகொள்கிறீர்கள். தந்தை நிச்சயமாக வருகிறார். மக்கள் சிவனின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்கள். நீங்கள் எல்லையற்ற தந்தைக்குரியவர்கள் என்பதை அறிவீர்கள். உங்களுக்கு இப்பொழுது அவருடனும், உங்கள் லௌகீகத் தந்தையர்களுடனும் ஓர் உறவுமுறை உள்ளது. அப்பாலுள்ள தந்தையை நினைவுசெய்வதனால், நீங்கள் தூய்மையானவர்கள் ஆகுவீர்கள். அவர்கள் லௌகீகத் தந்தையர் என்பதையும், இவர் அப்பாலுள்ள தந்தை என்பதையும் ஆத்மாக்களாகிய நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். பக்தி மார்க்கத்திலும் ஆத்மாக்கள் இதனைப் புரிந்துகொள்கிறார்கள். இதனாலேயே, ஆத்மாக்கள் கூவி அழைக்கிறார்கள்: ஓ கடவுளே! ஓ தந்தையாகிய கடவுளே! ஆத்மாக்கள் அழியாத தந்தையை நினைவுசெய்கிறார்கள், ஆனால் அந்தத் தந்தை வந்து சுவர்க்கத்தை ஸ்தாபிக்கிறார் என்பதை எவரும் புரிந்துகொள்வதில்லை. சமயநூல்களில், அவர்கள் சகல யுகங்களுக்கும் நீண்ட காலப்பகுதியை வழங்கியுள்ளார்கள். தந்தை தூய்மையற்றவர்களைத் தூய்மையாக்குவதற்கே வருகிறார் என்பதும், அவர் நிச்சயமாகச் சங்கம யுகத்திலேயே வரவேண்டும் என்பதும் எவரின் எண்ணங்களிலும் தோன்றுவதில்லை. சக்கரத்தின் கால எல்லையை நூறாயிரக் கணக்கான ஆண்டுகள் என அவர்கள் எழுதி, மக்களைக் காரிருளில் ஆழ்த்தி விட்டார்கள்! அவர்கள் கடவுளை அடைவதற்காகத் தொடர்ந்தும் தடுமாறி அலைகிறார்கள். பெருமளவு பக்தி செய்பவர்கள் நிச்சயமாகக் கடவுளை அடைகிறார்கள் என அவர்கள் கூறுகிறார்கள். அதிகளவு பக்தி செய்பவர்கள் நிச்சயமாக அவரை முதலில் காண வேண்டும். தந்தை உங்களுக்குத் தெளிவான கணக்கினைக் காட்டியுள்ளார். நீங்களே முதலில் பக்தி செய்தவர்கள். எனவே, நீங்களே கடவுளிடமிருந்து முதலில் ஞானத்தைப் பெற வேண்டும், அதன் மூலம் உங்களால் புதிய உலகிற்குச் சென்று ஆட்சிசெய்ய முடியும். எல்லையற்ற தந்தை குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானத்தை வழங்குகிறார். இதில் சிரமம் என்ற கேள்விக்கே இடமில்லை. தந்தை கூறுகிறார்: நீங்கள் என்னை அரைக்கல்பமாக நினைவுசெய்தீர்கள். எவரும் சந்தோஷமாக இருக்கும்பொழுது, என்னை நினைவுசெய்வதில்லை. இறுதியில் அனைவரும் சந்தோஷமற்றவர்கள் ஆகும்பொழுதே, நான் வந்து உங்களைச் சந்தோஷமானவர்கள் ஆக்குகிறேன். நீங்கள் இப்பொழுது மகத்தானவர்கள் ஆகுகிறீர்கள். முதலமைச்சரினதும், பிரதம மந்திரியினதும் பங்களாக்கள் எவ்வாறு முதற்தரமாக உள்ளன எனப் பாருங்கள்! அங்கு, பசுக்கள், தளபாடங்கள் போன்றவை முதற்தரமானவையாக இருக்கும். நீங்கள் அத்தகைய மகத்தானவர்கள் (தேவர்கள்) ஆகுகிறீர்கள்; நீங்கள் சுவர்க்கத்தின் அதிபதிகளான, தெய்வீகக் குணங்களையுடைய தேவர்கள் ஆகுகிறீர்கள். அங்கு, உங்கள் மாளிகைகள் வைரங்களும், இரத்தினங்களும் பதித்தவையாக இருக்கும். அங்கு உங்கள் தளபாடங்களும் முதற்தரமானவையாகவும், தங்கம் பதித்தவையாகவும் இருக்கும். இங்கு, ஊஞ்சல்கள் போன்றவையும் மிகவும் குறைந்த தரத்தைக் கொண்டவையாக உள்ளன. அங்கு, அனைத்தும் முதற்தரமானவையாகவும், வைரங்களும், இரத்தினங்களும் பதிக்கப்பட்டவையாகவும் இருக்கும். இதுவே உருத்திர ஞான யாகமாகும். சிவனே உருத்திரர் என்றும் அழைக்கப்படுகிறார். பக்தி முடிவிற்கு வரும்பொழுது, கடவுள் உருத்திர யாகத்தை உருவாக்குகிறார். சத்திய யுகத்தில், யாகங்கள் அல்லது பக்தி என்ற கேள்விக்கே இடமில்லை. இவ் வேளையிலேயே பின்னர் நினைவுகூரப்படுகின்ற, இந்த அழியாத உருத்திர யாகத்தைத் தந்தை உருவாக்குகிறார். இது. பக்தி எல்லா வேளையும்

தொடர்வதில்லை. பக்தியும், ஞானமும் உள்ளன. பக்தி இரவாகவும், ஞானம் பகலாகவும் உள்ளன. தந்தை வந்து பகலை ஏற்படுத்துகிறார். எனவே, குழந்தைகளாகிய நீங்கள் தந்தையிடம் அதிகளவு அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும். பாபா உங்களை உலக அதிபதிகள் ஆக்குகிறார்! அவரே அதி அன்பிற்கினிய பாபா. அவரை விட அன்பானவர்கள் எவரும் இருக்க முடியாது. நீங்கள் அவரை அரைக்கல்பமாக நினைவுசெய்தீர்கள்: பாபா, வந்து எங்கள் துன்பத்தை நீக்குங்கள்! தந்தை இப்பொழுது வந்து விளங்கப்படுத்துகிறார்: நீங்கள் வீட்டில் உங்களுடைய குடும்பத்துடன் வசிக்க வேண்டும். எவ்வளவு காலத்திற்கு நீங்கள் பாபாவுடன் இங்கு தங்கியிருப்பீர்கள்? நீங்கள்; பாபாவுடன் பரந்தாமத்தில் மாத்திரமே தங்கியிருக்க முடியும். பல குழந்தைகள் இங்கு தங்கியிருக்க முடியாது. ஆசிரியரால் எவ்வாறு கேள்விகளைக் கேட்க முடியும்? நீங்கள் ஒலிபெருக்கி ஒன்றிற்குப் பதில் அளிப்பீர்களா? இதனாலேயே, அவர் ஒரு நேரத்தில் சில மாணவர்களுக்கு மட்டுமே கற்பிக்கிறார். பல கல்லூரிகள் உள்ளன, பின்னர் அவர்கள் அனைவரும் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டியுள்ளது. ஒரு பட்டியல் உருவாக்கப்படுகிறது. இங்கு, ஒரேயொரு தந்தையே உங்களுக்குக் கற்பிக்கிறார். துன்ப நேரத்தில், இவ்வுலகிற்கு அப்பாற்பட்ட தந்தையை அனைவரும் நினைவுசெய்கிறார்கள் என்பதை நீங்கள் விளங்கப்படுத்த வேண்டும். அந்தத் தந்தை இப்பொழுது இங்கு வந்துள்ளார். மகாபாரத யுத்தம் உங்களின் முன்னால் உள்ளது. மகாபாரத யுத்தத்தின்பொழுதே, கிருஷ்ணரும் வந்தார் என அந்த மக்கள் நினைக்கிறார்கள். அது அசாத்தியமானது! மக்கள் முற்றிலும் குழப்பமடைந்துள்ளார்கள். அவ்வாறிருந்தும், அவர்கள் தொடர்ந்தும் கிருஷ்ணரை நினைவுசெய்கிறார்கள். இப்பொழுது, சிவனுடன் கூடவே, கிருஷ்ணரும் அதியன்பிற்கினியவர் ஆவார். எவ்வாறாயினும், இவர் (கிருஷ்ணர்) சரீரதாரி, ஆனால் அவரோ அசரீரியானவர். அசரீரியான தந்தையே சகல ஆத்மாக்களினதும் தந்தை. இருவரும் அதியன்பிற்கினியவர்கள். கிருஷ்ணரும் உலக அதிபதி ஆவார். யார் இனிமையானவர் என்பதை நீங்களே இப்பொழுது தீர்மானித்துக் கொள்ளுங்கள். சிவபாபா மட்டுமே உங்களை அத்தகைய தகுதிவாய்ந்தவர்களாக ஆக்குபவர். கிருஷ்ணர் என்ன செய்கிறார்? தந்தை மட்டுமே அவரை அவ்வாறு ஆக்குகிறார், எனவே தந்தையே அதிகளவு புகழப்பட வேண்டும். அவர்கள் சங்கரரின் நடனத்தைச் சித்தரித்துள்ளார்கள். உண்மையில், நடனம் போன்ற கேள்விக்கே இடமில்லை. தந்தை உங்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளார்: நீங்கள் அனைவரும் பார்வதிகள். அமரத்துவ பிரபுவான சிவன் உங்களுக்குக் கதையைக் கூறுகிறார். அது விகாரமற்ற உலகமாகும். அங்கு விகாரம் என்ற கேள்வியே இல்லை. தந்தை விகாரம் நிறைந்த உலகை உருவாக்குவாரா? விகாரங்களின் மூலம் துன்பம் ஏற்படுகிறது. மக்கள் பல்வேறு வகையான ஹத்தயோகங்களைக் கற்கிறார்கள். அவர்கள் சென்று குகைகளில் அமர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் நெருப்பின் மீதும் நடக்கிறார்கள். பெருமளவு மாயாஜால சக்தி உள்ளது; அவர்கள் மாயாஜாலத்தால் பல்வேறு பொருட்களைத் தோன்றச் செய்கிறார்கள். கடவுளும் மந்திரவாதி, நகை வியாபாரி, வர்த்தகர் என்றழைக்கப்படுகிறார். எனவே, அவர் நிச்சயமாக உயிர்வாழ்பவராக இருக்க வேண்டும். "நான் வருகிறேன்" என அவர் கூறுகிறார். அவர் மந்திரவாதி. அவர் மனிதர்களைத் தேவர்களாகவும், இரப்பவர்களை இளவரசர்களாகவும் மாற்றுகிறார். நீங்கள் அத்தகைய மாயாஜாலத்தைக் கண்டுள்ளீர்களா? அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது

கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தந்தை தாயாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

**தாரணைக்கான சாராம்சம்:**

1. நீங்கள் பூந்தோட்டத்திற்குச் செல்ல வேண்டும். எனவே, நறுமணம் மிக்க மலர்கள் ஆகுங்கள். எவருக்கும் துன்பம் விளைவிக்காதீர்கள். ஒரேயொரு பரலோகத் தந்தையுடன் சகல உறவுமுறைகளையும் கொண்டிருங்கள்.
2. சிவபாபாவே அனைவரிலும் இனிமையானவர். அவரிடம் மட்டும் அன்பு செலுத்துங்கள். சந்தோஷத்தை அருள்பவரான, தந்தையை நினைவுசெய்யுங்கள்.

**ஆசீர்வாதம்:** நீங்கள் ஒரு பறக்கும் பறவையாகி, இவ்வுலகின் மீதான பற்றிலிருந்து விடுபட்டு, சூட்சும வதனத்திற்குச் சுற்றுலா செல்வீர்களாக.

உங்கள் புத்தி எனும் விமானத்தின் மூலம் சூட்சும வதனத்துக்கும், அசரீரி உலகிற்கும் சுற்றுலா செல்வதற்கு, ஒரு பறக்கும் பறவை ஆகுங்கள். நீங்கள் விரும்பும் இடத்திற்கு நீங்கள் விரும்பியபொழுதெல்லாம் உங்கள் புத்தி மூலம் செல்லுங்கள். நீங்கள் இவ்வுலகின் மீதான பற்றிலிருந்து முழுமையாகவே விடுபட்டவர்கள் ஆகும்பொழுது மாத்திரமே அது சாத்தியமாகும். இவ்வுலகம் சுவையற்றது, பேறுகள் இல்லாத இடமான, இச் சுவையற்ற உலகின் மூலம் நீங்கள் செய்வதற்கு எதுவுமில்லாதபொழுது, நீங்கள் உங்களுடைய புத்தி மூலம் அங்கு செல்வதை நிறுத்த வேண்டும். இது ஆழ்நரகம் என்பதால், இவ்வுலகிற்குச் செல்வதற்கான எந்;த எண்ணங்களும், கனவுகளும் இல்லாதிருக்கட்டும்.

**சுலோகம்:** உங்கள் முகத்தின் மூலமும், உங்கள் செயற்பாடு மூலமும் சத்தியத்தினதும் நற்பண்புகளினதும் அனுபவத்தைக் கொடுப்பதே, மகத்துவம் ஆகும்.

**---ஓம் சாந்தி---**